

# திருவாதவூரரும் சைவத்திருநெறியும்

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆய்வரங்கில்
சமர்ப்பித்த கட்டுரைகளின் தொகுப்பு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

30. திருவாசக யாப்புக்கள் 440
ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

பொது

31. திருவாசகத்தில் சிதம்பரம் 455
கௌரி புண்ணியமூர்த்தி

32. மாணிக்கவாசகரும் திருப்பெருந்துறைத்தலமும் 464
பொ. நிலாந்தினி

33. திருவாசகத்தில் விளிகள் 477
பழ. முத்துவீரப்பன்

34. திருவாசகத்தில் அண்டவியல் பற்றிய சிந்தனைகள் 499
எஸ். முகுந்தன்

35. கிறிஸ்தவ இலக்கியங்களில் திருவாசகத்தின் செல்வாக்கு 517
றூபி வலண்ரீனா

36. நவீன ஆக்கங்களில் மாணிக்கவாசகர் 527
செ. யோகராசா

கட்டுரையாளர்கள் 544

# திருவாசகத்தில் சிதம்பரம்

கௌரி புண்ணியமூர்த்தி

'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க' எனப்பாடும் மணிவாசகர் 'தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே' என சிதம்பரத்தில் கோயில் கொண்டுள்ள ஈசனை விளிக்கிறார். அல்லல் அகற்றி அருவினை போக்கி தொல்லை தரும் வல்வினைகள் தொலைய அருள் வழங்கும் தெய்வத் திருத்தலமாக விளங்குவது திருச்சிற்றம்பலம் என்னும் சிதம்பரமாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரரின் பாடல் பெற்ற சிறப்புத் தலமான தில்லை மணிவாசகரின் சிந்தனையிலும் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சிதம்பரம், சிற்றம்பலம், பெரும்பற்றப் புலியூர், தில்லை எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது. கோயில் என்றால் பொதுவாக அது சிதம்பரத்தையே குறிக்கும்.

சிதம்பரத்தில் இறைவனாக திருச்சிற்றம்பலமுடையாரும் (திருமூல நாதர்), இறைவியாக சிவகாமி அம்மையும் அருள்பாலிக்கின்றனர். தலமரமாக தில்லையும் பிரதான தீர்த்தமாக சிவகங்கையும் திகழ்கின்றன. கோயிலில் சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்த சபை, இராசசபை என ஐந்து மன்றங்கள் உள்ளன. உலகம் வியந்து போற்றும் கலைவடிவமாகத் திகழும் நடராஜப் பெருமான் எழுந்தருளித் திகழும் புண்ணிய புனிதத்தலம் தில்லை. பஞ்ச பூதத் தலங்களுள் இது 'ஆகாயத் தலம்'. இதனை வெளிப்படுத்தும் முகமாக சிதம்பர இரகசியம் இங்கு காணப் படுகின்றது.

## வரலாற்றில் சிதம்பரம்

சிதம்பரம் வரலாற்றில் பெரும்புகழ் பெற்றது. சோழப் பேரரசன் இராஜ ராஜனின் வேண்டுதலின் பெயரில் நம்பியாண்டார் நம்பியால் திருமுறைப்

பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட தெய்வீகத் தலமாக விளங்குகின்றது. சேக்கிழாரால் பெரிய புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்ட பெருமை பெற்ற தலமாகும். சேர, சோழ, பாண்டிய, விஜய நகர மன்னர்களாலும் திருப்பணி செய்யப்பட்ட தலம் என்பதற்கு ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் எமக்குக் கிடைக்கின்றன. சிற்றம்பலத்திற்கு முதலாம் பராந்தக சோழன் பொன்வேய்ந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. அதேபோன்று பொன்னம்பலத்திற்கு முதலாம் ஆதித்த சோழன் பொன் வேய்ந்தான் என சேக்கிழாரின் பெரியபுராணமும், மணவில் கூத்தனரான காலிங்கராயன் பொன்னம்பலத்திற்கு பொன்னாலும், பேரம்பலத்திற்கு செம்பாலும் வேய்ந்தான் என்றும் திருமுறைகளை செப்பேடு செய்வித்தான் என்றும் தில்லைக் கோயிற் கல்வெட்டுக் கூறுகின்றது. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருத்தலம் இதுவாகும். சிதம்பரம் பற்றிய கல்வெட்டுக்கள் 271 உள்ளன. அவைகளுள் பெரும்பாலன கோப்பெருஞ்சிங்க அரசனைப் பற்றியும், ஜடாவர்ம சுந்தர பாண்டியனையும் பற்றியனவாகும். இவற்றுடன் இராஜேந்திர சோழன் முதல் மூன்றாம் இராஜராஜன் வரையான சோழ அரசர்களதும், விஜயநகர, நாயக்க மன்னர்களது கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

## திருவாசகத்தில் சிதம்பரம்

திருவாசகத்தில் 45 தலங்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் உள்ளன. இதில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் இருபத்தாறாகும். திருவாசகத்தில் உள்ள 51 பிரிவுகளில் 24 சிதம்பரம் சிற்றம்பலமுடையார் மீது பாடப்பட்டவை யாகும். கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருஉந்தியார், திருத்தோள் நோக்கம், அன்னைப்பத்து, குயில்பத்து, திருத்தசாங்கம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், கண்ட பத்து, அச்சப்பத்து, குலாப்பத்து, எண்ணப்பத்து, யாத்திரைப்பத்து, திருப்படையெழுச்சி, திருப்படையாட்சி, ஆனந்தமாலை,

அச்சோப்பதிகம் என்பவை அவையாகும். இதில் 60இற்கு மேற்பட்ட பாடல்களில் சிதம்பரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[1]

## சிதம்பரத்தின் அமைவிடச் சிறப்பு

திருவாசகத்தினூடாக சிதம்பரம் பற்றிய சமகாலத்து விடயங்கள் பல வெளிப்படுகின்றன. இவற்றில் கூறப்படுகின்ற விடயங்கள் ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் பாடப்பட்ட சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் மூலமும் உறுதிப்படுத்தப்படுகின்றது. பொதுவாக திருவாசகம் ஒன்பதாம் நூற்றாண்டில் உருவாக்கம் பெற்றது என்பதை பலரும் ஏற்கின்றனர்.[2] எனவே சிதம்பரம் பற்றித் திருவாசகம் கூறும் விடயங்களை தேவாரப் பாடல்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

கோயிலின் சுற்றுப் புறமும் அதன் அழகும் மணிவாசகரால் பல இடங்களில் எடுத்தாளப்படுகின்றது. கீர்த்தித் திருவகவலில் "எழில் பெறும் இமயத்து இயல்புடை அம்பொன் பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம் நவில்" என்பதன் மூலம் எழில்மிகு கயிலை மலையை ஒத்த புலியூர் என இத்தலத்தின் அழகு சிறப்பிக்கப்படுகின்றது. திருப்பொற்சுண்ணத்தில் (09ஆம் பாடல்) 'அணிதில்லை' அதாவது அழகு மிகுந்த தில்லை என்கின்றார்.

1. **நீர் வளம்:** மாணிக்கவாசகர் திருவாசகத்தில் தில்லையினுடைய நீர்வளம் பற்றி பல பாடல்களில் பாடியுள்ளார். திருத்தெள்ளேணத்தில் 'அலம்பார் புனல்தில்லை' (01) என்றும், திருப்பூவல்லியில் 'அணையார் புனல் தில்லை' (01) என்றும் பாடியுள்ளார். அதாவது அசைகின்ற நீர் சூழ்ந்த தில்லை எனவும், கட்டப்பட்ட அணைகளில் நீர் தேங்கி இருக்கும் தில்லை எனவும் சிறப்பிக்கப்படுகின்றது. இது நீர்வளமிக்கது என்பதால் "அன்னம் திளைக்கும் அணிதில்லை" (திருக்கோத்தும்பி-11) என்று கூறுகின்றார்.

---

1. சிதம்பரம் மயில்வாகனம், "திருக்கோயில் திருப்பணிகளும் சோழர்காலக் கல்வெட்டு ஆய்வுகளும்", சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2008.
2. வெள்ளைவாரணன்.கா., "மாணிக்கவாசகர் காலம்", திருவாதவூரரும் சைவத்திரு முறையும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2014, பக்: 66- 81.

இதையொத்தவகையில் நாவுக்கரசரும் தமது தேவாரப் பதிகத்தில் தில்லை பற்றிப் பேசுகின்றார். 'சிறைகொணீர் தில்லை' (நான்.தி:ப-22-பா.08), 'மாட்டினீர் வாளை பாயு மல்குசிற்றம் பலத்தே' (நான்.தி:ப-23-பா.03) என்கின்றார். நீர்ப்பாசனத்துக்காக தேக்கிவைக்கப்பட்ட நீர் நிறைந்த தில்லை என்றும் வாளை மீன்கள் பாயும் நீர்நிலைகளுள்ள சிற்றம்பலம் என்றும் சிறப்பிக்கின்றார்.

**2. வயல்:** சிதம்பரத்தின் நீர்வளம் பற்றிப் பாடிய மாணிக்கவாசகர் வயல் வெளி பற்றியும் ஒரு சில இடங்களில் குறிப்பிடுகின்றார். திருச்சாழலில் "தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலம்" (14) என்று பாடுகின்றார். அப்பர் பாடல்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இதனை 'செய்யரி தில்லை தன்னுட் புகழ்ந்த சிற்றம்பலம்' (நான்.தி:ப-2-பா.04) என்பனூ டாக வயலிலே தானியம் அறுவடை செய்யப்படுகின்ற தில்லை பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். வயல்களில் நீலோற்பல மலர்கள் மலர்ந்துள்ளமை பற்றி அப்பர் பாடுவதனூடாக அவ்வூரின் இயற்கை அழகும் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. 'செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலம்' (நான்.தி:ப-80-பா.05) எனப் பாடியுள்ளார்.

**3. சோலை:** கோயில் சோலைகள் சூழ்ந்த அழகிய இடம் என்பதை திருவாசகம் ஓரிரு இடங்களில் வெளிப்படுத்துகின்றது. கண்டபத்தில் "செறி பொழில்சூழ் தில்லை நகர்..." (06) என்று பாடப்பட்டுள்ளது. சம்பந்தரும் நாவுக்கரசரும் பல இடங்களில் சிதம்பரம் அமைந்திருந்த தில்லை நகரில் காணப்பட்ட சோலைகள் பற்றிப் பாடுகின்றனர். 'மாகந் தோய்பொழில் மல்குசிற் றம்பலம் மன்னி னாய்' (மூன்.தி:ப-01-பா.06), என்பதன் மூலமாக வானளாவிய சோலைகள் நிறைந்த திருச்சிற்றம்பலத்தே நிலைபெற்றவனே! என்று சம்மந்தர் இறைவனை விளிக்கின்றார். அதேபோன்று 'தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்' (நான்.தி:ப-81-பா.06) என்பதன் மூலம் தெத்தே என வண்டுகள் ஒலிக்கின்ற தில்லை என்றும் 'நாறுபூஞ் சோலைத் தில்லை நவின்றசிற் றம்பலத்தே' என்றும் பலவாறாக அப்பர் பாடியுள்ளார். அப்பரும் சம்மந்தரும் தில்லையின் சுற்றாடல் பற்றிப் பாடிய போக்கில் மணிவாசகரும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருத்தோள் நோக்கத்தில் "குன்றாச் சீர்தில்லை..." (02) என்பதன் மூலமாக தில்லை நகரின் செல்வ நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

## திருநடனச் செய்தி

முழு உலகமே நடராஜர் வடிவத்தை கலைப்படைப்பின் அற்புதமாகப் பார்க்கின்றது. அத்தகைய நடராஜரின் நடனம் பற்றி திருவாசகத்தில் 30 பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. 'தில்லை மூதூர் ஆடிய திருவடி', 'பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்' (கீர்த்தித் திருவகவல்), 'தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி' (போற்றித் திருவகவல்), 'தில்லை நிருத்தனே போற்றி' (காருணியத்து இரங்கல்), 'நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்' (திருவெம்பாவை), 'ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு' (திருப்பொற்சுண்ணம்), 'தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்', 'அம்பலத்தே கூத்தாடி', 'அணாங் கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற....', 'தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமோ நடமாடு' (திருச்சாழல்), 'அரசே பொன்னம்பலத் தாடும் அமுதே...' 'பொன்னம்பலக் கூத்தன்' (கோயில் மூத்த திருப்பதிகம்) முதலான பல அடிகள் நடராஜரின் நடனம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது.

அப்பர் பெருமானும் தமது பாடல்களில் இறைவனின் திருநடனம் பற்றிப் பாடுகின்றார். 'துஞ்சடை யிருள் கிழியத் துளங்கெரி யாடுமாயே' (நான்.தி:ப-2-பா.01) என்பதன் மூலமாக இருள் நீங்குமாறு கையில் அசைகின்ற தீயோடு கூத்து நிகழ்த்துகின்றமை பற்றி அவர் பாடுகின்றார். 'தில்லையம்பலத்தாடுகின்ற அத்தா' (நான். தி:ப-23-பா.01) என்று பாடுவதன் மூலமாக மணிவாசகருக்கு முன்னோடியாக இருந்துள்ளார்.

## பெரும்பற்றப் புலியூர்

சிதம்பரத்துக்கு மறுபெயர் பெரும்பற்றப்புலியூர் என்பதாகும். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் பூசை பண்ணியதால் அதற்குப் புலியூர் என்று பெயர் என்பது மரபாகும். முற்காலத்தில் அப்பெயர் கொண்டு அவ்வூர் அழைக்கப்பட்டமைக்கு மணிவாசகரின் பாடல் மிகச்சிறந்த சான்றாகும். "எழில்பெறும் இமயத்து இயல்புடை அம்பொன் பொலிதரு புலியூர்ப்

பொதுவினில் நடம்நவில்", "பொலிதரு புலியூர் புக்கினிது அருளினன்" (கீர்த்தித் திருவகவல்) என்றவாறு இடம்பெறுகின்றது. இப்பெயர் அக்காலத்திலும் சற்றுப் பிந்திய நூற்றாண்டுகளிலும் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றிருந்தமை திருவாசகத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. சோழ மன்னர்களான வீரராஜேந்திர சோழர், இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி. 1163), முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1116), பல்லவ மன்னனான இரண்டாம் கோப் பெருஞ்சிங்க தேவர் (கி.பி. 1218) முதலான பல அரசர்களது கல்வெட்டுக்களில் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயர் இடம்பெறுகின்றது.

*"தனியூர் பெரும்பற்றப்புலியூர் உடையார் திருச்சிற்றம்பலமுடையார்க்கு அஞ்சாவது ஆடிமாத முதல் தெவதான இறையிலாக...."*[3]

*"சொழகொனார் பெரும்பற்றப் புலியூர்ப் பிடாகை பள்ளிப்படையான விக்கிரம சோழ நல்லூர்.."*[4]

பரகேசரிவர்மரான வீரராஜேந்திர தேவர் கால குன்றத்தூர் வெண்குளப் பாக்கிழான் அரையன் தில்லை நாயகனாரான நந்திபன்மன் தில்லை இறைவனுக்கு திருநந்தவனம் செய்தமை பற்றிய கல்வெட்டிலும் இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவாசகத்துக்கு காலத்தால் முந்திய தேவாரத்திலும் பல இடங்களில் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயரை சிதம்பரத்தைக் குறிப்பதற்கு பயன்படுத்தியுள்ளனர். ஆறாம் திருமுறையில் 'பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' (ஆறாம் தி.மு:பதி-01, பா. 1-10) எனவும், 'புலியூர்ச்சிற்றம்பலமே புக்கார் தாமே' (ஆறாம் தி.மு: பதி-02, பா.1-10) எனவும் அப்பர் பாடுகின்றார். சுந்தர மூர்த்தி நாயனார் 'புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமாளை..' என்கின்றார்.

### பழைமையான ஊர்

சிதம்பரத் தலமானது சிற்றம்பலம், தில்லை என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டது. ஆனால் 'தில்லை' என்பது கோயில் அமைந்திருந்த நகரின்

3. South Indian Annual Report, N0-51, AR No 463 of 1902.
4. South Indian Annual Report, N0-56, AR No 468 of 1902.

பெயராகும். இது பரகேச நல்லூர், இளநாங்கூர், காரிகுடி, மணலூர் முதலான பதினான்கு சிற்றூர்களை உள்ளடக்கியதோர் பேரூராக இருந்தது.[5] இதற்கு திருவாசகமும் சிறந்த சான்றாக அமைகின்றது. "தில்லை மூதூர் ஆடிய திருவடி" (கீர்த்தித் திருவகவல் - 01).

*"தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும் ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"*

(திருவம்மானாய் - 05)

*"செறிபொழில்சூழ் தில்லை நகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி"*

(கண்டபத்து - 06)

தில்லை நகர் பழைமையானது என்றும் மணிவாசகர் தமது பாடல்களில் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தில்லையை 'மூதூர்' என்கின்றார் சம்பந்தர். 'ஏறு தொல்புகழ் ஏந்துசிற் றம்பலத் தீசனை" (மூன்றாம் திருமுறை: ப.01, பா. 11) என்று பாடியுள்ளதன் மூலம் அவ்வூரின் தொன்மை பற்றி அவரும் ஆச்சரியப்படுகின்றமை புலனாகின்றது.

## பொற்சபைக்கு அழைத்தமை

மணிவாசகரின் வாழ்க்கை வரலாற்றில் இறைவன் அவரை சிதம்பரத்திற்கு அழைத்தமை பற்றிக் கூறப்படுகின்றது. அச்சம்பவம் பற்றி அவர் கீர்த்தித் திருவகவலில்

*"நாயி னேனை நலமலி தில்லையுள்*
*கோல மார்தரு பொதுவினில் வருகென*
*ஏலு என்னை ஈங்கொழிந்தருளி"* (129) எனப் பாடியுள்ளார்.

## வேதம் முழங்குகின்றமை பற்றிய செய்தி

மணிவாசகர் காலத்தில் சிதம்பரத்தில் வேதங்கள் ஒலித்தன என்பதும் அங்கு அறிஞர்கள் வாழ்ந்தனர் என்பதும் அவரது பாடல்கள் மூலம்

---

5. சிதம்பரம் மயில்வாகனம், "திருக்கோயில் திருப்பணிகளும் சோழர்காலக் கல்வெட்டு ஆய்வுகளும்", சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2008.ப.47.

புலனாகின்றன. கண்டபத்தில் "நான்கு மறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே" (09), "வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே" (10) என்றும் பாடுகின்றார். திருவாசகத்துக்கு காலத்தால் முந்திய அப்பர் பாடலில் வேதங்களை ஓதுகின்ற அந்தணர்கள் தில்லையில் வாழ்ந்தமை பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

*"கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே*
*செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய"* (நான்காம் திருமுறை)

அத்துடன் "சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடி" (திருப்பொற்சுண்ணம் -19) என்பதனூடாக அறிஞர்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

## தென்தில்லை

மணிவாசகர் சில இடங்களில் தில்லையை 'தென்தில்லை' என்று விளிக் கின்றார். "தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி" (போற்றித் திருவகவல் - 92), "தென்தில்லைக் கோனே" (திருச்சதகம் - 09), "தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்" (திருச்சாழல் - 12) என்று குறிப்பிடுகின்றார். சிவன் இருக்கும் இடமாகக் கருதப்படுகின்ற கயிலை வடக்கே இருப்பதாக நம்பப்படுகின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே கயிலைக்கு தெற்கே தில்லை அமைந்துள்ளமையால் 'தென்தில்லை' என மணிவாசகர் விளிக்கின்றார் எனக் கருத முடியும்.

## பொன்னம்பலம்

திருவாசகத்தின் பல பாடல்களில் 'பொன்னம்பலம்' எனும் பதத்தை மாணிக்கவாசகர் பயன்படுத்தியுள்ளார். கோயில் மூத்த திருப்பதிகம் முழுவதிலும் 'பொன்னம்பலத்து எம்முடியா முதலே', 'பொன்னம்பலக் கூத்துகந்தானே' என்றவாறு இடம்பெறுகின்றது. ஐந்தாம் திருமுறையில் இடம்பெறும் அப்பர் பெருமானது 'தூய செம்பொன்னினால் எழுதி மேய்ந்தசிற் றம்பலக்கூத்தா' (ஐந்தாம் திருமுறை: ப.02, பா. 08) எனும் பாடலிலும், சம்பந்தரது 'செம்பொன்னம்பலத் துள்நின்ற' (முதலாம் திருமுறை: ப.01, பா. 04) எனும் பாடலிலும் 'பொன்னம்பலம்' எனும் பதம் காணப்படுகின்றது.

ஆனால் முதலாம் ஆதித்த சோழனது மகன் முதற் பராந்தக சோழன் (கி.பி. 907-955) இச்சிற்றம்பலத்திற்கு பொன் வேய்ந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், லெய்டன் பெரிய செப்பேடும் கூறுகின்றன. இதனடிப்படையில் சில ஆய்வாளர்கள் மணிவாசகரின் காலம் தொடர்பில் சில சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.[6] எனினும் இவனுக்கு முன் இரண்ய வர்மன் பொன்வேய்ந்தான் என்று கோயிற் புராணம் குறிப்பிடுகின்றது. அத்துடன் பல்லவர் காலத்தில் வாழ்ந்த அப்பர், சம்பந்தர் பாடல்களின் மூலம் அவர்கள் காலத்திலேயே சிற்றம்பலம் பொன்னால் வேயப்பட்டிருந்தது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் மாணிக்கவாசகர் பராந்தக சோழனுக்கு பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தார் என்று கூறுவதற்கு அவர் பாடிய 'பொன்னம்பலம்' எனும் பதத்தை சான்றாகக் கூறமுடியாது. அவர் வாழ்ந்த காலத்திலேயே அது பொன்னால் வேயப்பட்டிருந்தது என்பதற்கு தேவாரப் பாடல்கள் சான்றாக அமைகின்றன.

மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தின் பல இடங்களில் சிதம்பரத்தின் அமைவிடம், அங்கு நடம்புரியும் நடராஜரின் சிறப்பு, ஊரின் தொன்மை, அதன் சிறப்பு முதலானவற்றை வெளிப்படுத்தும் வகையில் பாடியுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

---

6. கணபதிப்பிள்ளை. க., "மாணிவாசகர் வரலாறு... ஓர் அகச்சான்றுக் கண்ணோட்டம்", திருவாதவூரரும் சைவத்திருமுறையும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2014, பக்:01- 65.